**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED BLACK GRANITE & GRANITIC GNEISS QUARRY OF M/S TAMIL NADU MINERALS LIMITED IN AN EXTENT OF 16.54.0 HA AT S.F.NO.287 IN PANCHAPALLI AND S.F.NO.19 IN NAMMANDAHALLI VILLAGE, PALACODE TALUK, DHARMPAURI DISTRICT ON 11.07.2023 AT 11.00 A.M., IN THE GOVERNMENT HIGHER SECONDARY SCHOOL, PANCHAPALLI VILLAGE, PALACODE TALUK, DHARMAPURI DISTRICT.**

**PRESIDING OFFICERS:**

| | | |
|---|---|---|
| 1. Tmt.S.Anitha, | : | District Revenue Officer,<br>Dharmapuri. |
| 2. Er.A.Nithyalakshmi, | : | District Environmental Engineer,<br>TamilNadu Pollution Control Board,<br>Dharmapuri. |

**PROJECT REPRESENTATIVES**

| | | |
|---|---|---|
| 1. Thiru. E.Ganesan, | : | The Deputy Manager,<br>M/s. TamilNadu Minerals Limited,<br>S.F.No. 287 & 19,<br>Panchapalli & Nammandahalli Village,<br>Palacode Taluk,<br>Dharmapuri District. |
| 2. Thiru.K.Sakthivel, | : | Divisional Manager ,<br>M/s. TamilNadu Minerals Limited,<br>SF.No. 287 & 19,<br>Panchapalli & Nammandahalli Village,<br>Palacode Taluk,<br>Dharmapuri District. |

**List of Government staff and public participated is enclosed**

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri welcomed the District Revenue Officer, Dharmapuri District, other Government Officials, Public, Social & Environmental activists for the Public Hearing and informed that the proposed black Granite & Granitic Gneiss quarry of M/s Tamil Nadu Minerals Limited at S.F.No.287 in Panchapalli and S.F.No.19 in Nammandahalli Village, over an extent of 16.54.0 Ha, Palacode Taluk, Dharmapuri District, has obtained Mining approval from the Department of Geology and mines and then approached State Level Environmental Impact Assessment Authority-TN seeking Environmental Clearance for the proposed black Granite & Granitic Gneiss quarry. In this regard, SEIAA-TN has issued Terms of Reference (TOR) subject to one of the conditions that Public Hearing shall be conducted and address the concerns raised during the public hearing to SEIAA-TN.Based on that, the public hearing was arranged on today 11.07.2023 after getting approval from the District Collector, Dharmapuri District and public notice has been published as mandated in the newspaper namely "The Times of India" (English) & "Dhinathanthi (Tamil)" on 09.06.2023.

The Project Proponent will make power point presentation about the said proposed projects. After that the public are requested to express their views, concerns and questions if any by indicating their name and village name from where he /she belongs and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting along with the hard copy of the minutes of the meeting will be recorded and sent to the State Environment Impact Assessment Authority (SEIAA-TN), Chennai.

On behalf of the Project Proponent, Thiru. E. Ganesan, Deputy Manager, Tamil Nadu Minerals Limited has explained about the detailed report of the proposed project through a power point presentation.

In continuation to that, the public started to express their views, opinions, concerns and questions and the clarification from the project proponent are detailed below

**1.Thiru.P.K.Narayanasamy, Panchayat President, Panchapalli**

The local employment means, is it for educated people or labourers, the road is getting damaged due to transportation of black stones. Due to blasting, the shops and houses are getting damaged, whether compensation will be given for that and employment should be given to the local people. Is that the revenue has been provided to the Panchayat during the quarry work already carried out on 2016 and it is how much. Whether permission granted to start M-sand work and when the work will be started and further granite stone will be given to local people.

**Thiru.E.Ganesan, Deputy Manager, Tamil Nadu Minerals Limited**

At the time of commencement of quarry work, if there are educated people and if there are those who have a driving license for driving the truck will be taken from the locality if required.

Indirect employment opportunities will be created in total labour contract method for shaping the stone. They will work without causing any damage during the quarrying activity.

The quarrying activity will be handled by the experienced personnel certified by the Director General of Mine Safety such as Mine Manager, Mine Work Assistant, Mine Foremen and hence accidents will be prevented. Whether M sand unit can be carried out? It is not economically possible to establish polishing unit for each quarry.

The granite stones are polished in the polishing plant at Krishnagiri, Mathepalli and permission has been obtained from Tamil Nadu Government Order No. 108 dated 04.08.2016 to carry out the M-sand work. Further, the road will not get damaged and not so many stones be transported. Further, District Administration will obtain DMF fund and Royality for the rural development. Also, the individual can also participate of in E-tender.

**2. Thiru.Muthusamy, Koothandahalli.**

If this granite company got commenced in Panchapalli and Nammandahalli village around 35 villages in the surrounding area will be affected. If you ask why, there are mostly farmers in this area and no government employees. It is a agriculturally dependent area, before the water is available within 10 feet and now no water is available in the bore well even in 1000 feet. If you ask why ,the water in the dam is not coming to this area since the Bannari Quarry and Gem Granite were permitted to start the quarrying operation and depth of this quarry has gone above 1000 feet.

The storage water available in that dam does not come to this area for irrigation because of that agriculture gets affected. Once again the government is starting this quarry by distracting us that there is no pollution and no sound due to blasting. On behalf of the farmers who have come here and, on my behalf, I request you not to give permission to open this quarry for any reason.

**Thiru.E.Ganesan, Deputy Manager, Tamil Nadu Minerals Limited**

The farmers livelihood will not get affected by starting this project since the height of the hill from ground level is 45 meters. The farmers are important than Quarry.The quarrying activity will be carried out up to 30 meters depth in total depth of 45 meters and there is no impact on ground water due to quarrying activity. Every 6 months, report will be submitted to the pollution control board and the union environment office and under their supervision the quarry will function.

**3.Thiru.Anbalagan, Nammandahalli**

I thank everyone who attended this environment public hearing and the representative of the project has explained that there is no danger due to blasting. Due to blasting and vibration, the children are getting scared. Dusty & black smoke zone was created and driving of vehicles causes risks.

You are telling specifically as 30 m but the depth already gone up to 60,80,100 meters. Farmers are suffering because of lack of environmental protection. We inform the government that both the panchayats people do not want this quarry because of lack of environmental protection.

**Thiru.E.Ganesan, Deputy Manager, Tamil Nadu Minerals Limited**

That's why I explained all these methods. This work will be carried out by modern methods only and dust wont arise by this method. Apart from that, the trees will be planted to prevent dust around the mining area.

**4.Thiru.Anbalagan, Nammandahalli.**

Sir (project representative) said is true that the dust won't come. The people in the village can't be so aware. The mineral extracted so far is enough Please. I kindly request the Government, that there is no need of any benefits from this project.

**Public**

The public has requested the TAMIN not to give any explanation.

**5. Thiru.Kanniappan, Palayam**

I worked in mines for 10 years. Whether the dust will disperse in Air during wire saw cutting or not. Like that if the chemical used during blasting comes in contact with eyes, it will get damaged.

They are planting trees 20,30,50 and 100 number of trees are there in that hill. They are going to plant only 100 trees in 5 years, Hence, the farmers will get affected. Four quarries such as Gem, Bannari, Sakkat India, Mineral Institute, were carried work so far. No public building was built and no use for the public because of this quarry so far. Don't do quarry. Because of this quarry, wild life and agriculture gets affected. They are telling that children are not getting affected and no vibration. Further, dust will spread in the air during wire saw cutting.

The blasting can be done by balloon, by pouring powder, whether powder will affect eye or not? Road will get damaged and will disturb the passage of vehicles, no use is there by starting this quarry hence, doesn't need quarry.

**Thiru.E.Ganesan, Deputy Manager, Tamil Nadu Minerals Limited**

The water is used to suppress the dust and about 1.5 KLD of water is used during the activity to supress the dust emission.

**Public**

The public has requested the TAMIN not to give any explanation.

**Thiru.E.Ganesan, Deputy Manager, Tamil Nadu Minerals Limited**

This is TAMIN and not me, Profit is for Tamil Nadu Government and public.

**6. Thiru.Sivakumar, Nammandahalli**

The quarry work has already affected the farmers and if the work has started again there will be loss to us and wont for you. The use of one machine instead of one hundred people will affect the employment. The meeting should be conducted on Sunday and there is water for 250 feet in the quarry. But no water in the farmer's well even 1 foot since the water gets stagnant in quarry. The farmers went to the places like Bengaluru, Coimbatore for work. The farmers get affected because of five quarries and no rainfall since 2 years. Now it is raining and we are farming which will be affected if quarry work starts and hence he is objecting the project.

**Public**

There is no need for explanation from TAMIN and everyone will come to express their opinions.

**The District Revenue Officer, Dharmapuri**

TAMIN won't explain. The public can express their view by telling their name and village name before giving any opinion.

**7. Thiru.Neelakandan, Kadusettipatti (Gulikadu)**

I am the secretary of Naam Tamilar Katchi for this constituency. Whether the Government officials have seen this quarry before this public hearing. They are telling that they are quarrying the hill but quarrying was already finished. The water from the hills is stored in quarry pits and how agriculture will get water. The Panchapalli dam and its catchment area is not filled due to this quarrying activity. The dam is likely to dry up completely. The future generation and wild life will get affected and then this place become an unliveable one. The quarry should be completely stopped.

The technology has developed, whether, the people will see if the public hearing comes in the daily newspapers like Time of India and Dinathanthi Most of the people attending public hearing are not local people, since the news was not known to local people. No proper awareness to the public. The Tamil Nadu Government should consider these views and should stop the Quarry.The drinking water is supplied to the Dharmapuri town only from the Panchapalli Dam and the protest will also take place through Naam Tamilar Katchi. On behalf of the Naam Tamilar Katchi we are asking to stop the quarry completely.

**8. Thiru.Aanandhan, NaamTamilar Katchi, West District Head**

They had welcomed us all by giving sanitizer and masks. These stones will be exported to Italy, Japan and European countries. Black granite, which is rarely available in the world, is available only in Dharmapuri district. The first quality stone will go abroad. Stones that are not of good quality will come to us. Due to this, they are deceiving us that there will not be any noise.

Nitrous oxide is used for fast-moving machines. Our natural resources go abroad. The mountains are the breast of this earth and these mountains and trees stops the wind and gets the rain. If there is a blasting, nitrous oxide will mix with the water and causes damage wherever it goes. The roads will be affected by the vehicle carrying granite stones. Let us live and don't destroy future generations. Therefore, I request you to cancel the project of this quarry keeping in view the opinion of the public.

**9.Thiru.Vasanthkumar, Palayam**

The explosives mix with water during blasting. The children bathe in that water during the summer. There is a possibility of genetic mutations and vulnerabilities to them.

Due to quarrying, all the down pour/rain will go to this quarry. Wildlife will also be get affected. This water cannot be used for agriculture because it is mixed with chemicals. I also request the Government of India and the Government of Tamil Nadu that we do not need employment instead conserve the natural resources. Hence we don't want this quarry.

**10.Thiru.Shanmugam, Palayam**

The chemicals present in the quarry is more powerful. Due to this chemical, pregnant woman are more likely to have miscarriage. Wildlife is affected. Affects the health of the children. Therefore, I request to close down the quarry in this place.

**11.Thiru.Radhakrishanan, Palayam**

We have been facing water scarcity for 15 years since the commencement of this quarry. There is a spring of water because of this mountain. If you say that you will take for 45 meters only, how the water will come and how we can do farming activity. Moreover, due to quarrying of Bannari Quarry there is no water. Dust emission will be there on the road when traveling. So I request not to carry out quarry in this area.

**12. Thiru.Prabu, Marandahalli.**

Our land is located near to the lake catchment area, we have harvested paddy for 3 seasons 15 years ago . But now we are paying money to buy rice because of this quarry. If there are mountains, the rainwater goes into ponds, pits and the groundwater level will rise. After that, agriculture can be done only if there is water in wells and bore wells. Due to quarrying, the water gets stagnant in the quarry itself. There will be no water in the wells and agriculture will be completely destroyed. 16 Lakes and 1 Dam pass through this Panchapalli Dam and everything is dried now. Due to vibrations, elephants are frightened and enters the farmlands which causes damage and dies to the electrocution. Wildlife, agriculture and the environment are affected. So we request on behalf of the people to abandon this quarry project.

**13.Thiru.Govindarajan, Naam Tamilar Katchi, Seithi Thodarbalar**

During quarry work, only 20 trees are planted per year and 100 trees are planted in 5 years and where does the rest go. The elephants are passing the forest from time to time. If the quarry work is not stopped, we will protest under the leadership of the party leader.

**14.Thiru.Kumar, Naam Tamilar Katchi.**

How do we get rain?, the mountains stop the clouds and it falls as rain, because of this small animal will have a good life . If they quarry up to 30 or 40 m depth, where the animals will go. I request the government on behalf of Naam Tamilar Katchi, to not to allow this quarry.

**15. Thiru.Anbalagan, Palayam**

Public, farmers and many have shared their views. We request the district administration to kindly consider this. I request on behalf of the public not to have this quarry.

**16. Thiru.Dinesh Kumar, Palayam**

Totally say no and what are they saying, the Tamilnadu should not take mineral wealth to earn revenue. It is a treasure and it has another way. In the future, we can find another way to earn it. It can be taken when we can't do agriculture. Because agriculture is immortal. Tamil Nadu Mineral Limited will give some reason and may come. Private companies may come after you. Mineral wealth should be protected as a treasure. Hence we don't need the quarry.

**17. Thiru.Rajignanam, Gangapalayam**

Don't take mineral resources as like all the previous speakers have said. The environment is affected by this quarry. There is no water in the wells. It doesn't rain here but it rains in the surrounding villages. The dam is upstream to the village but no water is coming to the village. I request you not to give permission for this quarry as it is polluting the environment.

**18. Thiru.Prabu, Marandahalli**

Due to the use of chemicals to prevent the noise, the waste from that is mixed with lake, pond and river water and mixes into the ground water. Earlier, the girl children in our house will reach puberty before the age of 15 years. But now, due to this water. they reach puberty at the age of 7 to 10 years. This makes Dharmapuri district as number one in child marriage in Tamil Nadu. This affects girl children. So I request to ban the quarry from reopening.

**19. Thiru.Surya, Karagur, Panchapalli**

Everyone here has said that the quarry should not be operated. Sir, you are the only one who spoke that the quarry should take place. Its total value is 1 crore and we don't need it. There are 18 villages, 10 wells can be dug with around 50 lakhs and increase agriculture and leave the quarry. Water gushes out of the quarry in our nearby village like a Kuttralam.

Farmers are doing agriculture in 250 acres out of 500 acres in Panchapalli village. All the school students depend on this village to study. So I say as a college student and a person in panchapalli to stop this quarry.

**20. Thiru.Mallesh, Palayam**

He said that we will take only 30 meters here. There is nothing to quarry since it was already taken. The dam was filled due to rain 15 years ago. The water from the dam came to my farmland through the quarry. The paddy crops have dried up due to chemicals in that water. Likewise, all land will be affected. I request on behalf of everyone that the quarry should be stopped.

**21. Thiru.P.K.Shanmugam, AIADMK, Ondriya Aavai Thalaivar**

Farmers are the most affected by this quarrying. The dam was not filled during the period of former president of the Panchayat Council. After that, no water in any of the 50, 60 bore well dug. They will take 45 feet in the quarry. But already there is no water at 1000 feet. The reason for this is quarry and the farmers are the most affected if this is carried out. The area is surrounded by coconut trees like pollachi. But now everything is dead. I request you not to open the quarry due to this. I request Amma to conduct this meeting on another day as many people did not come. and I say with one voice that we will not allow the quarry at this place.

**22.Thiru.Maregounder, Karagur, Panchapalli**

There is a river flowing from the dam and the dam belongs to the mountain and the mountain belongs to my town. The quarry was started in 1991. There has been no rain for 7 years since then. My house vibrates when there is a blast. Further, there was no rain for past 10 years. It rained for two years after these quarries were closed then the dam was filled. I request Amma to instruct the government to close down the quarry.

**23.Thiru.Balasubramaniam, Panchapalli**

We have already suffered many losses due to the commencement of this granite quarry. The reason is that blasting not only causes tremors but also causes crack in houses, but also the particles gets dissolve in the rain cloud and there is no rain. The forest department is in the process of setting up a sanctuary around us to protect the wildlife. So that our wild animals will be protected.The blasting will affect the wild life and agriculture. Thank you to all those who gave me the opportunity to speak on behalf of the farmers /public to address not to operate this quarry.

**24. Thiru.Sivakumar, Namandahalli.**

All panchayat presidents should pass a resolution in the grama sabha meeting to stop this quarry. I humbly request not to start this quarry here.

**25. Thiru.Ponmudi, Gangapalayam**

Sir explained that the mineral resources sector will generate some benefits. I like to tell you some of the shortcomings what I know. There will be about 3/4 km from my house to the quarry. During blasting it will affect up to 5 km, 40 villages in the periphery will be affected. On behalf of myself and on behalf of the village, I request you to stop this scheme as it affects the hearing of children, pregnant women and education of school children.

**26. Thiru.Kumar, Naam Tamizhzr Katchi, Palacode**

The government should not start this stone quarrying taking note of the fact that all the people in Panchapalli village have said no to this quarry. If that happens, we are informing the government that all the people will come together and take a big protest.

**27. Thiru.Arunkumar, Naam Tamizhzr Katchi Treasurer (Palacode Thoguthi)**

The mountain stops the rain from which the farming takes place. You're stopping it. Think about whether it can be recreated and mountain shall not destroyed.

**28.Thiru.Rajagopalan, Viduthalai Siruthaikal Katchi, Maanila Thunai Seyalalar**

No action was taken by the district administration against the looting of mineral wealth in these areas like Sudanur and Gummanur and almost 673 petitions were given condemning the gangs for 3 years. Further, the Police, Revenue Department, Pollution Control Board, Public Works Department etc. were not taken any action against the complaints. How there will be rain when there is a robbing of nature. The ground water get affected since 500m depth taken from panchapalli and hence the quarry work shall not be started. Thanks.

The public hearing meeting was concluded with thanks to the District Revenue Officer, Dharmapuri District, Officials, Public and NGOs and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting along with the hard copy of the minutes of the meeting will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA-TN), Chennai.

The list of participants, audio and video recording, representation received during meeting in original with photographs of the Public hearing meeting are enclosed herewith.

Attendance of the public and recordings made in Pendrive are enclosed.

**District Environmental Engineer**
**TamilNadu Pollution Control Board**
**Dharmapuri**

**District Revenue Officer**
**Dharmapuri**

**தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளி மற்றும் நம்மாண்டஅள்ளி கிராமங்களில் தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம் (கருப்பு கிரானைட் & கிரானடிக் க்னீஸ் குவாரி) புல எண். 287, பஞ்சப்பள்ளி கிராமம், புல எண். 19 நம்மாண்டஅள்ளி கிராமத்தில் 16.54.0 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்ட கருப்பு கிரானைட் & கிரானடிக் க்னீஸ் குவாரியிலிருந்து கல் வெட்டி எடுத்தல் தொடர்பாக 11.07.2023 அன்று முற்பகல் 11.00 மணியளவில் அரசு மேல்நிலைப்பள்ளி பஞ்சப்பள்ளி, பஞ்சப்பள்ளி கிராமம், பாலக்கோடு வட்டம், தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விவரங்கள் :**

முன்னிலை :

| | | |
|---|---|---|
| 1. திருமதி.சு.அனிதா | : | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>தருமபுரி. |
| 2. திருமதி.ஆ.நித்யலட்சுமி | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>தருமபுரி. |

**திட்ட பிரதிநிதிகள்:**

| | | |
|---|---|---|
| 1. முனைவர்.ஈ.கணேசன் | : | துணை மேலாளர்,<br>தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம்,<br>புல எண் : 287 & 19<br>பஞ்சப்பள்ளி, நம்மாண்டஅள்ளி கிராமம்,<br>பாலக்கோடு வட்டம்,<br>தருமபுரி மாவட்டம். |
| 2. திரு.மு.சக்திவேல் | : | கோட்ட மேலாளர்,<br>தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம்,<br>புல எண் : 287 & 19<br>பஞ்சப்பள்ளி, நம்மாண்டஅள்ளி கிராமம்,<br>பாலக்கோடு வட்டம்,<br>தருமபுரி மாவட்டம். |

கலந்து கொண்ட அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தருமபுரி

மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள், பிறத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு அனைவரையும் இக்கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருக வருக என வரவேற்கிறேன். மேலும் தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம் (கருப்பு கிரானைட் & கிரானடிக் க்னீஸ் குவாரி) புல எண். 287, பஞ்சப்பள்ளி கிராமம், புல எண். 19 நம்மாண்டஅள்ளி கிராமத்தில் 16.54.0 ஹெக்டேர் பரப்பளவில் கிரானைட் கற்கள் & கிரானடிக் க்னீஸ் எடுக்க புவியியல் சுரங்கத்துறையிடம் Mining Approval என்ற அனுமதி பெற்று சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் விண்ணப்பித்துள்ளனர். மேலும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம்- தமிழ்நாடு பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு Terms of Reference (TOR) கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 11.07.2023 இன்று பொதுமக்கள் கேட்புக் கூட்டம் நடத்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் சம்மந்தமான அறிவிப்பு தமிழ் நாளிதழ் தினத்தந்தி மற்றும் ஆங்கில நாளிதழ் டைம்ஸ் ஆப் இந்தியாவில் 09.06.2023 அன்று வெளியிடப்பட்டது.

இத்திட்டம் குறித்த விளக்கங்களை நிழற்படம் (Powerpoint Presentation) மூலம் திட்ட ஆதரவாளர் அவர்கள் எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் தங்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்கள், வினாக்கள் மற்றும் கருத்துக்களை இம்மேடைக்கு அருகே உள்ள ஒலிப்பெருக்கியில் வந்து தங்களுடைய பெயர் மற்றும் ஊரின் பெயரை குறிப்பிட்டு விட்டு பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம். மேலும் இந்நிகழ்வுகள் அனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்படுவதுடன், எழுத்துப்பூர்வமாகவும் பதிவு செய்யப்பட்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தி/ள். தமிழ்நாடு கனிம நிறுவனம் சார்பாக திரு.இகணேசன், துணை மேலாளர் அவர்கள் இத்திட்டம் குறித்த விளக்கங்களை நிழற்படம் (Powerpoint Presentation) மூலம் விவரித்தார்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள், கேள்விகள் ஆகியவற்றிற்கு திட்ட ஆதரவாளர் அவர்கள் அளித்த விளக்கங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

**1. திரு.P.K.நாராயணசாமி, ஊராட்சி மன்ற தலைவர், பஞ்சப்பள்ளி**

உள்ளூர் வேலைவாய்ப்பு என்றால் படித்தவர்களுக்கா இல்லை உழைப்பாளிகளுக்கா, இரண்டாவதாக கருப்பு கல் ஏற்றி செல்வதால் ரோடு சேதாரம் ஆகிறது. மேலும் வெடி வைப்பதால் கடைகள், வீடுகள் சேதாரம் ஆகிறது அதற்கு இழப்பீடு வழங்குவீர்களா மற்றும் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புகள் கொடுக்க வேண்டும். ஏற்கனவே 2016-ல் நடைபெற்ற பணியின் மூலம் ஊராட்சிக்கு வருவாய் வழங்கப்பட்டுள்ளதா எவ்வளவு வழங்கப்பட்டது. M-Sand பணி துவங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதா எப்போது பணி துவங்கப்படும் என கேட்டுக் கொண்டார். மேலும் கிரானைட் கற்கள் உள்ளூர் நபர்களுக்கு கொடுப்பீர்களா என கேட்டார்.

**திரு.இ.கணேசன், துணை மேலாளர் (TAMIN)**

குவாரி பணி துவங்கும் போது படித்தவர்கள் இருந்தால் ஒட்டுநர் ஒரிமம் உள்ளவர்கள் இருந்தால் லாரி ஓட்டுவதற்கும் தேவைப்பட்டால் உள்ளூரில் இருந்து நாங்கள் எடுப்போம். இந்த கல்லை வடிவமைப்பதற்கு Total Labour Contract முறையில் மறைமுக வேலைவாய்ப்புகள் ஏற்படும். சுரங்கப்பணியின் போது சோதாரம் எதுவும் ஏற்படாமல் தான் பணிபுரிவார்கள். ஒன்றிய அரசின் சுரங்கப் பாதுகாப்பு (Director General of Mine Safety) ஒன்றிய அரசின் அமைப்பிலிருந்து சான்று பெற்றவர்கள் அதில் தேர்ச்சி பெற்றவர்கள், சுரங்க மேலாளர், சுரங்க பணி துணைவர், சுரங்க மைன்ஸ் போர்மேன், சுரங்க முன்னவர்கள் இப்படிப்பட்ட அனுபவம் உள்ளவர்களை வைத்து இந்த பணியினை செய்வதால் எந்தவொரு ஆபத்தும் நடக்காமல் தடுக்கப்படும். M-Sand பணி இங்கு செய்ய முடியுமா என்றால் ஒவ்வொரு குவாரிக்கும், பாலீஸ் யூனிட் போட பொருளாதார ரீதியாக சாத்தியமில்லை. கிருஷ்ணகிரி மாதேபள்ளியில் எங்களுடைய கிரானைட் மெருகூட்டும் ஆலை உள்ளது அந்த ஆலைக்கு இங்கிருந்து அனுப்பப்படும். M-Sand பணி செய்ய தமிழ்நாடு அரசு ஆணை எண்.108 நாள் 04.08.2016 -ல் அனுமதி வாங்கப்பட்டுள்ளது. மேலும் ரோடு சேதாரம் ஆகாது அவ்வளவு கற்கள் செல்லாது. மேலும் DMF Fund மற்றும் Royality மூலம் கிராம வளர்ச்சிக்கு நிதி மாவட்ட நிர்வாகத்தால் பெறப்படும் என்று தெரிவித்தார். மேலும் அரசு அறிவிக்கும் E-Tender-ல் நீங்களும் கலந்து கொள்ளலாம்.

**2. திரு.முத்துசாமி, கூத்தாண்டஅள்ளி**

இந்த கிரானைட் கம்பெனி பஞ்சப்பள்ளி மற்றும் நம்மாண்டஅள்ளி கிராமத்தில் ஆரம்பித்தால் இங்கு சுற்று வட்டாரத்திலுள்ள 35 கிராமங்களுக்கு பாதிப்பு வரும். ஏன் என்று கேட்டால் விவசாயிகள் தான் அதிகம் இந்த பகுதியில் யாரும் அரசு ஊழியர்கள் அல்ல. விவசாயத்தை நம்பி வாழ கூடிய பகுதி, முன்பு எல்லாம் 10 அடியில் நீர் கிடைக்கும்.

இன்று 1000 அடி போர் போட்டால் கூட நீர் இல்லை ஏன் என்று கேட்டால் இங்கு உள்ள பண்ணாரி குவாரி மற்றும் ஜெம் கிரானைட் ஆகியவற்றுக்கு அனுமதி கொடுத்து ஆரம்பித்த காரணத்தினால் அணையில் இருக்கும் தண்ணீர் இந்த பகுதிக்கு வருவது இல்லை. இந்த கிரானைட்டில் 1000 அடிக்கு மேலே ஆழம் போய் விட்டது. அந்த அணையில் இருக்க கூடிய சேமிப்பு நீர் இந்த பகுதி பாசனத்திற்கு வருவது இல்லை. அதனால் விவசாயத்திற்கு பாதிப்பு. மீண்டும் அரசாங்கம் இந்த குவாரி தொடங்கி மாசு இல்லை, வெடி வைத்தால் ஒலி வருவதில்லை என எங்களை திசை திருப்ப வேண்டாம். எக்காரணத்தைக் கொண்டும் இங்கு குவாரியை திறக்க அனுமதி கொடுக்க வேண்டாம் என இங்கு வந்திருக்கும் விவசாயிகள் சார்பாகவும், என் சார்பாகவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**திரு.இ.கணேசன், துணை மேலாளர் (TAMIN)**

இந்த திட்டத்தை துவக்குவதால் விவசாய வாழ்வாதாரம் பாதிக்கப்படாது. தரைமட்டத்திருந்து மலையின் உயரம் 45 மீட்டரில் உள்ளது. விவசாயத்தை கருத்தில் கொண்டு குவாரி முக்கியமா, விவசாயிகள் முக்கியமா என்று கேட்டால் விவசாயிகள் தான் முக்கியம். இந்த குவாரியில் 45 மீட்டரில் 30 மீட்டர் அளவிற்கு மட்டும் பணி செய்வதால் நிலத்தடி நீருக்கு எந்தவொரு பாதிப்பும் இல்லை. ஒவ்வொரு 6 மாதத்திற்கும் மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கும், ஒன்றிய சுற்றுச்சூழல் அலுவலகத்திற்கும் அறிக்கை அனுப்ப வேண்டும் அவர்களுடைய கண்காணிப்பில் இந்த சுரங்கம் இருக்கும் என கூறினார்.

**3. திரு.அன்பழகன், நம்மாண்டஅள்ளி**

இந்த சுற்றுச்சூழல் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றி, வெடி வைப்பதால் எந்த ஆபத்தும் இல்லை என ஐயா அவர்கள் தெளிவாக சொன்னார். இந்த வெடியின் காரணமாகவும், அதிர்வின் காரணமாகவும் குழந்தைகளுக்கு பயம் ஏற்படுகிறது. தூசு, கருப்பு புகை மண்டலம் ஏற்படுகிறது. அதில் வாகனம் ஓட்டுவதால் ஆபத்துகள் ஏற்படுகிறது. 30 மீ என்று குறிப்பாக சொல்கிறீர்கள். 60, 80, 100 மீட்டர் ஆழம் கூட சென்று விட்டது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்ட காரணத்தினால் தான் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதால் இரு பஞ்சாயத்து மக்களும் சேர்ந்து இந்த குவாரி வேண்டாம் என்று அரசாங்கத்திற்கு தெரிவித்து கொள்கிறோம்.

திரு.இ.கணேசன், துணை மேலாளர் ((TAMIN)

அதற்காகத்தான் நான் இந்த முறைகளை எல்லாம் விளக்கினேன். மேலும் நவீன முறைகளை கொண்டு தான் இப்பணியை செய்கிறோம். இதில் தூசி வராது. அது போக சுரங்கத்தை சுற்றி மரம் நடுவோம். தூசி வராமல் தடுத்து நிறுத்தி சுரங்கத்தை செயல்படுத்துவோம் என கூறினார்.

4. திரு.அன்பழகன், நம்மாண்டஅள்ளி

அய்யா சொல்வது உண்மை தான் தூசி வராது என்று சொல்கிறார். கிராமத்தில் இருக்கும் மக்கள் அவ்வளவு சரியாக பார்க்க முடியாது. தயவு செய்து இது வரைக்கும் கனிம வளத்தை எடுத்தது போதும், இதிலிருந்து ஏற்படும் நன்மை எதுவும் தேவை இல்லை என அரசாங்கத்திடம் தயவு கூர்ந்து கேட்டுக் கொள்கிறேன்.

பொதுமக்கள்

தமிழ்நாடு கனிம நிறுவனம் சார்பில் தயவு செய்து விளக்கம் கொடுக்காதீர்கள் என்று கூறினார்கள்.

5. திரு.கன்னியப்பன், பாளையம்

நான் 10 வருடமாக மைன்ஸ் வேலை செய்தேன். இதுல வந்து ஒயர்சா கட்டிங் போடும் போது துகள்கள் காற்றின் மூலம் பரவுமா பரவாதா?. அதே மாதிரி பவுடர் போட்டு வெடி வைத்தால் அந்த கெமிக்கல் கண்ணில் பட்டால் கண் போய் விடும். மரங்கள் நடுகிறார்கள் 20,30,50 அந்த மலையிலே 100 மரங்கள் இருக்கிறது. ஐந்து வருடத்திற்கு 100 மரங்கள் தான் நடப்போகிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு பாதிப்பு. இதுவரை ஜெம், பண்ணாரி, சாக்கட் இந்தியா, கனிம நிறுவனம் போன்ற 4 குவாரிகள் வேலை செய்தது. இதனால் நம்ம பகுதிக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பு உண்டா. இதுவரைக்கும் பொது கட்டிடம் உருவாக்கி தரவில்லை. இந்த குவாரியால் பொதுமக்களுக்கு எந்த பயன்பாடும் கிடையாது. குவாரி செய்ய வேண்டாம் இதனால் வனவிலங்குகள், விவசாயம் பாதுகாக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை நில அதிர்வும் இல்லை என்கிறார்கள்.

மேலும் ஒயர்சா கட்டிங் போடும் போது துகள்கள் காற்றில் பரவி பாதிப்பு எற்படும். பலூன் போட்டு வெடிக்கலாம், பவுடர் ஊற்றலாம் பவுடர் கண்ணிற்கு வருமா வராதா? ரோடு பழுதடைந்து வாகனம் செல்ல இடையூறு ஏற்படும் இந்த் குவாரி ஆரம்பித்தால் எங்களுக்கு எந்த பயன்பாடும் இல்லை எனவே இந்த குவாரி வேண்டாம்.

திரு.இ.கணேசன், துணை மேலாளர் ((TAMIN)

துகள் வருமா என்றால் அதை நிறுத்துவதற்காகத் தான் தண்ணீரோடு சேர்த்து செய்கிறோம். தூசி பறக்குமா என்றால் பறக்காமல் இருக்கத்தான் 1.5 கிலோ லிட்டர் தண்ணீர் பயன்படுத்துகிறோம்.

பொதுமக்கள் :

தமிழ்நாடு கனிம நிறுவனம் சார்பில் எந்த ஒரு விளக்கமும் தேவையில்லை என கூறினார்கள்

திரு.இ.கணேசன், துணை மேலாளர் ((TAMIN)

இது தமிழ்நாடு அரசு, நிறுவனம் இது நான் கிடையாது தமிழ்நாடு அரசுக்கும், பொதுமக்களுக்கும் தான் லாபம்.

6. திரு.சிவகுமார், நம்மாண்டஅள்ளி

ஏற்கனவே இங்கு குவாரி பணி நடந்திருக்கு இதனால் விவசாயிகளுக்கு பாதிப்புதான் தவிர மீண்டும் பணி செய்தால் உங்களுக்கு லாபம் எங்களுக்கு நஷ்டம். இந்த திட்டத்தில் நூறு பேர்க்கு வேலை செய்யும் இடத்தில் ஒரு மிஷினிற்கு வேலை கொடுக்கிறீர்கள். நீங்கள் உங்கள் லாபத்தை எதிர்பார்க்கிறீர்கள். ஆனால் எங்களுக்கு நஷ்டம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது தான் அரசு அந்த அரசு எங்களுக்கு துரோகம் செய்தால் நாங்கள் எங்கு செல்வது. நீங்கள் இக்கூட்டத்தை ஞாயிற்றுகிழமை வைக்க வேண்டியதுதானே இப்போ வைத்தால் பொதுமக்கள் எப்படி வருவார்கள். குவாரியில் 250 அடி தண்ணீர் இருக்கிறது. விவசாயி கிணற்றில் 1 அடி தண்ணீர் கூட இல்லை. அதற்கு காரணம் குவாரி பணி செய்தால் தண்ணீர் அங்கேயே தேங்கி விடுகிறது.விவசாயிகள் வேலைக்கு பெங்களூரு, கோயம்புத்தூர் போன்ற இடங்களுக்கு செல்கின்றனர். 5 குவாரியாலும், மழை இல்லாமலும் விவசாயிகள் 2 வருடமாக பாதிக்கப்பட்டனர். தற்போது மழை பெய்து விவசாயம் செய்கிறோம். மீண்டும் குவாரி பணி செய்தால் பாதிப்பு வரும் இதனால் தான் குவாரி வேண்டாம்.

பொதுமக்கள்

தமிழ்நாடு கனிம நிறுவனம் சார்பில் விளக்கம் எதுவும் தேவையில்லை ஒவ்வொருவராக வந்து அவர்களது கருத்தக்களை மட்டும் சொல்லும் படி கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட வருவாய் அலுவலர், தருமபுரி

அய்யா விளக்கம் அளிக்க மாட்டார்கள். நீங்கள் உங்கள் கருத்துகளை மட்டும் சொல்லலாம் அதற்கு முன்பு உங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயரை சொல்லி சொல்லலாம்.

7. திரு.திருநீலகண்டன், காடுசெட்டிப்பட்டி (குளிக்காடு)

நாம் தமிழர் கட்சியில் தொகுதி செயலாளராக உள்ளேன். இந்த கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு முன்பு அரசு அலுவலர்கள் அந்த குவாரியை பார்த்தார்களா? மலையை எடுப்பதாக சொல்கிறார்கள். அதை ஏற்கனவே வெட்டி முடிச்சிட்டாங்க. மலையிலிருந்து தான் ஊற்று வரும். பழைய குவாரி குழிகளில் நீர் நிரம்பி உள்ளது. அங்கு இருந்தால் விவசாயத்திற்கு எப்படி தண்ணீர் வரும். பஞ்சப்பள்ளி நீர்ப்பிடிப்பு பகுதியில் இந்த குவாரியின் காரணமாக அணை நிரம்புவதில்லை. அணை முற்றிலும் வறண்டு போவதற்கு வாய்ப்பு இருக்கு. கற்கள் வெட்டி எடுப்பதால் வனவிலங்குகளை பாதிக்கும் பின் வருங்கால சந்ததியினரை பாதிக்கும் மேலும் இந்த ஊரில் வாழ முடியாத நிலைதான் இருக்கும். குவாரியை முற்றிலுமாக தடுத்து நிறுத்த வேண்டும். இந்த கருத்து கேட்புக் கூட்டம் செய்தி தினந்தந்தி மற்றும் டைமஸ் ஆப் இந்தியா பேப்பரில் கொடுத்தால் மக்கள் இதை பார்ப்பார்களா டெக்னாலஜி நிறைய வந்து விட்டது. இங்கே வந்து இருப்பவர்கள் வெளியூர் நபர்கள் உள்ளூர் நபர்கள் நிறைய நபர்கள் வரவே இல்லை ஏனென்றால் செய்தி தெரியவே இல்லை. விழிப்புணர்வு சரியாக செய்யவில்லை.

தமிழ்நாடு அரசு இந்த கருத்தை உள்வாங்கி கொண்டு இந்த குவாரியை முற்றிலுமாக தடுத்த நிறுத்த வேண்டும். மாவட்ட தலைநகரமான தருமபுரி நகரத்திற்கு பஞ்சப்பள்ளி அணையிலிருந்து தான் குடிநீர் செல்கிறது. இதை கருத்தில் கொண்டு குவாரியை தடுத்து நிறுத்த வேண்டும். நாம் தமிழர் கட்சியின் மூலமாகவும் போராட்டம் நடக்கும். நமது நாட்டின் முதுகெலும்பாக இருப்பது விவசாயம் என மகாத்மா காந்தி சொல்லி இருக்கிறார். இந்த குவாரியை முற்றிலுமாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

8. திரு.ஆனந்தன், நாம் தமிழர் கட்சி, மேற்கு மாவட்ட தலைவர்

எங்களை எல்லாம் வரவேற்றார்கள் Sanitizer கொடுத்தார்கள் மாஸ்க் கொடுத்தார்கள். இந்த கற்களை எடுத்து இத்தாலிக்கும், ஜப்பானுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் கொடுத்து விடுவார்கள். உலகத்திலேயே அரிதாக கிடைக்கக் கூடிய கருப்பு கிரானைட் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் தான் கிடைக்கும். வெளிநாட்டிற்கு முதல் தரமான கல் போய் விடும். தரம் இல்லாத கற்கள் நமக்கு வரும். இதனால் எந்த சத்தமும் நமக்கு வராது என நம்மை ஏமாற்றுகிறார்கள். நைட்ரஸ் ஆக்ஸைடு வேகமாக ஓடக்கூடிய மிஷின்களுக்கு பயன்படுகிறது. நமது இயற்கை வளம் வெளிநாடுகளுக்கு செல்கிறது. இந்த பூமியுடைய மார்பாக இருப்பது இந்த மலைகள் தான் மேலும் மரங்கள் காற்றை தடுத்து நிறுத்தி மழை பொழிகிறது.

வெடி வைத்தால் நைட்ரஸ் ஆக்ஸைடு தண்ணீர் எங்கு செல்கிறதோ அதில் கலந்து செல்லும் அதனால் பாதிப்பு. கிரானைட் கற்களை ஏற்றி செல்லும் வாகனத்தால் சாலைகள் பாதிக்கப்படும். எங்களை வாழவிடுங்கள் எதிர்கால சந்ததியினரை அழித்து விட வேண்டாம். இதனால் மக்களின் கருத்தை ஏற்றுக் கொண்டு இந்த குவாரியின் திட்டத்தை இரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**9. திரு.வசந்தகுமார், பாளையம்**

வெடிக்கும் வெடி மருந்துகள் தண்ணீரில் கலக்கிறது. குழந்தைகள் கோடை காலத்தில் அந்த நீரில் குளிக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு மரபணு மாற்றம் மற்றும் பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது. இந்த குவாரியினால் பெய்யும் மழை தண்ணீர் எல்லாம் குவாரிக்கு போய் விடும். மேலும் வனவிலங்குகள் பாதிக்கப்படும். விவசாயத்திற்கு இந்த தண்ணீரை பயன்படுத்த முடியாது ஏனெனில் அது இரசாயனம் கலந்த தண்ணீர். மேலும் இந்திய அரசாங்கம் மற்றும் தமிழக அரசிடம் கேட்டுக் கொள்கிறேன் எங்களுக்கு வேலைவாய்ப்புகள் வேண்டாம் இயற்கை வளங்களை பாதுகாத்து கொடுங்கள். இதனால் இந்த குவாரி எங்களுக்கு வேண்டாம்.

**10. திரு.சண்முகம், பாளையம்**

குவாரியில் இருக்கும் இரசாயனம் அதிக சக்தி வாய்ந்தது . இந்த இரசாயனத்தினால் கர்ப்பிணி பெண்களுக்கு கருச்சிதைவு ஆவதற்கு வாய்ப்பு உள்ளது. வனவிலங்குகள் பாதிக்கப்படுகிறது. குழந்தைகளின் உடல்நலம் சரியில்லாமல் போகிறது. ஆதலால் இந்த இடத்தில் உள்ள குவாரியை மூட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**11. திரு.ராதாகிருஷ்ணன், பாளையம்**

இந்த குவாரி ஆரம்பித்ததில் இருந்து 15 வருடமாக நமக்கு தண்ணீர் பஞ்சம் வந்து விட்டது. இந்த மலையின் காரணமாக நமக்கு நீர் ஊற்று இருந்தது. 45 மீட்டர் தான் எடுப்பீர்கள் என்று சொன்னால் தண்ணீர் எப்படி வரும் எங்களால் விவசாயம் எப்படி செய்ய முடியும். மேலும் பண்ணாரி குவாரியில் ஒரு மலையை இரண்டாக பிளந்ததனால் தண்ணீர் விவசாயத்திற்கு இல்லை. சாலையில் செல்லும் போது தூசி பறக்கும். அதனால் இங்கு குவாரி வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**12. திரு.பிரபு, மாரண்டஅள்ளி**

எங்களுளைடய நிலம் ஏரி நீர்பிடிப்பு பகுதிக்கு அருகே உள்ளது. 15 வருடத்திற்கு முன்பு 3 போக நெல் அடித்தோம் . ஆனால் தற்போது பணம் கொடுத்து அரிசி வாங்குகிறோம் காரணம் இந்த குவாரி. மலைகள் இருந்தால் தான் மழைநீர் குளங்களுக்கோ, குட்டைகளுக்கோ சென்று நிலத்தடி நீரின் மட்டம் உயரும். அதன்பிறகு கிணறு மற்றும் போர்களில் தண்ணீர் வந்தால் தான் விவசாயம் செய்ய முடியும். குவாரி வெட்டி ஏடுப்பதால் அந்த நீர் அங்கேயே தேங்கி விடும். நீரூற்றாக செல்லாது கிணறுகளில் தண்ணீர் இருக்காது விவசாயம் முற்றிலும் மலுங்கி போய்விடும். இந்த பஞ்சப்பள்ளி டேம் மூலம் தண்ணீர் 16 ஏரி 1 டேமிற்கு செல்கிறது. தற்போது எல்லாம் வற்றி போகிறது. வெடி வைக்கும் அதிர்வினால் யானைகள் பயந்து விவசாய நிலத்திற்குள் செல்வதால் பாதிப்பு உண்டாவதுடன் மின்சாரம் தாக்கி இறந்து விடுகிறது. வனவிலங்குகளுக்கும், விவசாயத்திற்கும் மற்றும் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே இந்த குவாரி திட்டத்தை கைவிட வேண்டும் என மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

**13. திரு.கோவிந்தராஜன், நாம் தமிழர் கட்சி, செய்தி தொடர்பாளர்**

குவாரி பணி செய்ய மலையை வெட்டி எடுக்கும் போது வருடத்திற்கு 20 மரங்கள் தான் நடுகிறார்கள். 5 வருடத்திற்கு, 100 மரங்கள் தான் நடுவார்களாம் மற்றவை எங்கே போகிறது. வனப்பகுதியில் யானைகள் அவ்வப்போது வந்து செல்கிறது. குவாரி பணியை நிறுத்தவில்லையென்றால் கட்சி தலைவர் தலைமையில் போராட்டம் நடத்துவோம்.

**14. திரு.குமார், நாம் தமிழர் கட்சி**

நமக்கு மழை எப்படி பொழிகிறது மலைகள் மேகங்களை தடுத்து நிறுத்தி அது மழையாக பொழிகிறது. இதனால் சிறு சிறு விலங்குகளுக்கு நல்ல வாழ்வு அமையும். இவர்கள் 30 அல்லது 40 மீ வெட்டி எடுத்து விடுவோம் என்றால் அந்த விலங்குள் எங்கே செல்லும். இந்த மலைக்குவாரிக்ள் வேண்டாம் என அரசுக்கு நாம் தமிழர் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

**15. திரு.அன்பழகன், பாளையம்**

பொதுமக்கள் விவசாயிக்ள், நிறைய நபர்கள் அவர்களுடைய கருத்துக்களை பகிர்ந்து இருக்கிறார்கள். தயவு செய்து மாவட்ட நிர்வாகம் இதை கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்த குவாரி வேண்டாம் என பொதுமக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

16. திரு.தினேஷ்குமார், பாளையம்

ஓட்டுமொத்தமாக வேணாம் என்று சொல்லுங்க அவர்கள் என்ன சொல்கிறார்கள் தமிழ்நாட்டு வருவாயை ஈட்ட கனிம வளத்தை எடுத்து ஈட்டவேண்டாம். அது ஒரு புதையல் அதற்கு வேறு வழி உள்ளது. வருங்காலத்தில் ஈட்டலாம் அதற்கு வேறுவழி தேடலாம். எப்போது விவசாயம் அழியுமோ அப்போது அதை எடுத்து கொள்ளலாம். ஏனென்றால் விவசாயம் அழியாது. தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏதாவது காரணம் சொல்லி வந்து விடலாம். உங்களைக் காட்டி தனியார் கம்பெனிகள் வரலாம். கனிம வளத்தை பொக்கிஷமாக பாதுகாக்க வேண்டும். இதனால் குவாரி எங்களுக்கு வேண்டாம் என நன்றி கூறி விடைபெறுகிறேன்.

17. திரு.ராஜிஞானம், கங்கபாளையம்

இதற்கு முன்னாள் பேசியவர்கள் எல்லாம் கூறியது போல் கனிம வளம் எடுக்க வேண்டாம். இந்த குவாரியால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. கிணறுகளில் தண்ணீர் இல்லை. இங்கு மழை பெய்வதில்லை சுற்றியுள்ள கிராமங்களில் மழை பெய்கிறது. டேம் மேலே உள்ளது ஆனால் கிராமத்திற்கு தண்ணீர் வருவதில்லை.மேலும் சுற்றுச்சூழல் மாசு படுவதால் இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்.

18. திரு.பிரபு, மாரண்டஅள்ளி

சத்தம் வராத கெமிக்கல் பயன்படுத்துவதால் அங்கு இருந்து வரும் கழிவுகள் ஏரி, குளம், குட்டை மற்றும் ஆற்று தண்ணீரில் கலந்து நிலத்தடி நீரில் ஊறி அதை குடிப்பதனால் நம்ம வீட்டில் இருக்கும் பெண் குழந்தைகள் இதற்கு முன் 15 வயதிற்கு மேல் பருவம் அடைவார்கள். ஆனால் இந்த நீரின் காரணமாக 7 முதல் 10 வயதிலேயே பருவம் அடைந்து விடுகிறார்கள். இதனால் தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டம் குழந்தைகள் திருமணத்தில் முதலிடத்தில் உள்ளது. இதனால் பெண் குழந்தைகள் பாதிப்பு அடைகிறார்கள். எனவே இந்த குவாரியை மீண்டும் துவங்க தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

19. திரு.சூர்யா, கரகூர், பஞ்சப்பள்ளி

இங்குள்ளஅனைவரும் குவாரியை நடத்தக் கூடாது என்று பேசினார்கள். ஐயா நீங்கள் ஒருவர் தான் குவாரி நடத்த வேண்டும் என்று பேசுகிறீர்கள். இதன் மொத்த மதிப்பீடு 1 கோடி நமக்கு இது தேவை இல்லை. சுமார் 50 இலட்சம் போதும் 18 கிராமங்கள் இருக்கிறது. 18 கிராமத்திற்கு 10 கிணறுகள் வெட்டுங்கள் விவசாயத்தை பெருக்குங்கள். குவாரியை விட்டு விடுங்கள். குற்றாலத்தை போன்று அருகிலுள்ள எங்கள் கிராமத்தில் குவாரியில் தண்ணீர் கொட்டுகிறது.

மேலும் பஞ்சப்பள்ளி கிராமத்தின் 500 ஏக்கரில் 250 ஏக்கரில் விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். மேலும் பள்ளி மாணவர்கள் அனைவரும் இந்த கிராமத்தை நம்பி படிக்க உள்ளனர். எனவே இந்த குவாரியை நிறுத்த வேண்டும் என கல்லூரி மாணவராகவும் பஞ்சப்பள்ளியில் ஒரு நபராகவும் கூறுகிறேன்.

**20. திரு.மல்லேஷ், பாளையம்**

இங்கு 30 மீட்டர் மட்டும் தான் எடுப்போம் என சென்னார். ஏற்கனவே வெட்டி எடுத்தாச்சி நீங்க வெட்டி எடுக்க ஒன்றும் இல்லை. 15 வருடத்திற்கு முன்பு தேன்கனிகோட்டையில் மழை பெய்து அணை நிரம்பியது. அணையிலிருந்து நீர் குவாரி வழியாக என்னுடைய விவசாய நிலத்திற்கு வந்தது. அதில் இருந்து கெமிக்கல் மூலம் நெல் பயிர்கள் காய்ந்து போய்விட்டது. அதுபோல் தான் எல்லா நிலமும் பாதிக்கப்படும். இதனால் குவாரியை நிறுத்த வேண்டும் என எல்லோர் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

**21. திரு.P.K.சண்முகம், அஇஅதிமுக ஒன்றிய அவைத்தலைவர்**

இந்த குவாரி நடப்பதால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகள். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவராக இருந்த போது அணையே நிரம்பவில்லை. சுமார் 50, 60 போர்கள் போட்டு ஒன்றில் கூட தண்ணீர் வரவில்லை. குவாரியில் 45 அடிக்கு எடுப்பார்கள். ஆனால் ஏற்கனவே 1000 அடிக்கு தண்ணீர் இல்லை. இதற்கு காரணம் குவாரி, இதை நடத்தினால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகள் தான். பொள்ளாச்சி மாதிரி தென்னை மரங்கள் இந்த பகுதியைச் சுற்றி இருக்கும். ஆனால் இப்போது எல்லாம் செத்து மடிந்து விட்டது. இதனால் குவாரியை திறக்கக் கூடாது என கேட்டுக் கொள்கிறேன். நிறைய நபர்கள் வரவில்லை என்ற காரணத்தால் இந்த கூட்டத்தை அம்மா அவர்கள் இன்னொரு நாள் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த இடத்தில் குவாரியை நடத்தவிட மாட்டோம் என்பதை அனைவரின் ஒருமித்த குரலாக நான் கூறுகிறேன்.

**22. திரு.மாரேகவுண்டர், கரகூர், பஞ்சப்பள்ளி**

என் ஊரை சேர்ந்த மலை, மலையை சேர்ந்த டேம், டேமை சார்ந்து ஆறு ஓடுகிறது. அத்தனை ஓடியும் 1991-ல் இந்த குவாரி ஆரம்பிக்கப்பட்டது. அதிலிருந்து 7 ஆண்டுகள் மழை இல்லை. வெடி வைக்கும் போது என் வீடு அதிர்கிறது. மேலும் 10 ஆண்டுகள் மழை இல்லை. இந்த குவாரிகள் மூடிய இரண்டு ஆண்டுகள் மழை பெய்து டேம் நிறைந்தது. குவாரியை மூட அரசுக்கு பரிந்துரைக்குமாறு அம்மா அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

23. திரு.பாலசுப்பிரமணியம், பஞ்சப்பள்ளி

இந்த கிரானைட் தொடங்கியதால் ஏற்கனவே நிறைய இழப்புகளை சந்தித்து உள்ளோம். காரணம் என்னவென்றால் வெடி வைப்பதால் நில அதிர்வுகள் மட்டுமல்ல வீடுகள் விரிசல் விடுவது மட்டுமல்ல அந்த துகள்கள் மழை மேகத்தை கரைத்து மழையே இல்லாமல் செய்ய கூடிய சூழல் உருவாகிறது. நம்மை சுற்றி சரணாலயம் ஏற்படுத்துகிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள் வனத்துறையினர். அதனால் நம்முடைய காட்டு விலங்குகள் பாதுகாக்கப்படும். ஆனால் இந்த வெடி வைப்பதால் நில அதிர்வு விலங்குகளின் உயிர்களுக்கு அபாயம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. விவசாயம் மிகவும் பாதிக்கப்படுகிறது. விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சார்பாக குவாரியை நடத்த கூடாது என்று சொல்லி பேச வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி.

24. திரு.சிவகுமார், நம்மாண்ட அள்ளி

அனைத்து பஞ்சாயத்து தலைவர்களும் இந்த குவாரி வர வேண்டாம் என கிராம சபை கூட்டத்தில் தீர்மானம் போட்டு நிறைவேற்ற வேண்டும். இங்கு குவாரியை ஆரம்பிக்க வேண்டாம் என தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

25. திரு.பொன்முடி, கங்க பாளையம்

கனிம வளத்துறையால் சில நன்மைகள் உண்டாகும் என ஐயா எடுத்துரைத்தார். அதனின் தீமைகள் என்ன என்று எனக்கு தெரிந்ததை உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். குவாரிக்கும் என்னுடைய வீட்டிற்கும் ஒரு 3/4 கிலோ மீட்டர் இருக்கும். வெடி வைக்கும் போது அதன் தன்மை 5 கி.மீ வரை பாதிக்கும். சுற்றளவு 40 கிராமங்கள் பாதிக்கப்படும். குழந்தைகள் செவித்திறன், கர்ப்பிணி பெண்கள் பாதிப்பு, பள்ளிக் குழந்தைகள் படிப்பு பாதிப்பு ஏற்படும். ஆதலால் இத்திட்டத்தை நிறுத்த வேண்டும் என என் சார்பாகவும், கிராமத்தின் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

26. திரு.குமார், நாம் தமிழர் கட்சி, பாலக்கோடு

பஞ்சப்பள்ளி கிராமத்தில் அனைத்து மக்களும் கல்குவாரி வேண்டாம் என்று கூறி இருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு இந்த கல் குவாரியை தொடங்கக் கூடாது. அப்படி தொடங்கினால் மக்கள் அனைவரும் ஒன்று கூடி மாபெரும் போராட்டத்தை எடுப்போம் என்று அரசாங்கத்திற்கு தெரிய படுத்திக் கொள்கிறோம்.

**27. திரு. அருண்குமார், நாம் தமிழர் கட்சி பொருளாளர் (பாலக்கோடு தொகுதி)**

மழை வருகிறது எப்படி என்றால், அந்த மலை தடுத்து நிறுத்தி மலையில் இருந்து மழை பெய்து விவசாயம் நடைபெறுகிறது. அதை நீங்கள் தடுத்து நிறுத்துகிறீர்கள். அதை மீண்டும் உருவாக்க முடியுமா என்பதை சிந்தியுங்கள். இத்திட்டத்திற்காக மலையை அழிக்க கூடாது என என் கருத்தை பதிவு செய்கிறேன்.

**28. திரு. ராஜகோபாலன், வி.சி.க, மாநில துணை செயலாளர்**

தூடனூர், கும்மனூர் போன்ற இந்த பகுதிகளில் உள்ள கனிம வளத்தைக் கொள்ளையடித்து வரும் கும்பலைக் கண்டித்து 3 ஆண்டுகளாக கிட்டத்தட்ட 673 மனுக்கள் கொடுத்தும் மாவட்ட நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காவல்துறை, வருவாய்த் துறை, மாசு கட்டுப்பாடு வாரியம், பொதுப்பணித்துறை போன்ற எல்லா துறைக்கும் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. இயற்கை வளத்தை கொள்ளையடித்தால் மழை எப்படி வரும். பஞ்சப்பள்ளியில் 500 அடி ஆழம் எடுத்தால் கூட நிலத்தடிநீர் கிடைப்பதில்லை. எனவே கனிம வளத்தை எடுக்கக் கூடாது என நன்றி கூறி விடை பெறுகிறேன்.

பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் முடிவுற்ற நிலையில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர், தருமபுரி, அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வல அமைப்புகள் அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும் இக்கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்ட நகலுடன், இக்கூட்ட நடவடிக்கைகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும் பொதுமக்கள் கருத்து கேட்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் பட்டியல், ஒலி மற்றும் ஒளிப்பதிவு, பெறப்பட்ட அசல் மனுக்கள் மற்றும் புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நடைபெற்ற கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பொதுமக்களின் வருகைப் பதிவேடு மற்றும் குறும்பதிவி (Pendrive) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
தருமபுரி

மாவட்ட வருவாய் அலுவலர்
தருமபுரி